<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,</u>

<u>சிவகங்கை.</u>

**O.S.No.40/2013** **PW.1 (Chandran)**

<u>பிரதிவாதிகள் தரப்பு கு.வி :-</u> (11.02.2020)

வா.சா.ஆ.27-ஆவணத்தை நான் யாரிடம் வாங்கினேன் என்றால் நான் டாக்டர் என்னிடம் கொடுத்ததை இன்சூரன்ஸ் கம்பெனிக்கு கொடுப்பதற்கு முன்பாக நகல் எடுத்து வைத்துள்ளேன். நான் வா.சா.ஆ.27-ஆவணத்தின் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு தரவழைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.27-ஆவண காலத்தில் நான் பெங்களூரில் பணியாற்று வந்தேன் என்றால் ஆமாம். ஆனால் என் அம்மாவை சேர்த்துவிட்டு அவ்வப்போது வந்து பார்த்துக் கொண்டேன். நான் என் அம்மாவை மருத்துவமனையில் எந்தெந்த தேதியில் சேர்த்தேன் என்பதையும், எந்தெந்த தேதியில் பார்த்தேன் என்பதும் எனக்கு ஞாபகமில்லை. சேலத்திலிந்து பெங்களுருக்கு பயண நேரம் 6 மணி நேரம். நான் என் அம்மாவை பார்த்த தேதிகளில் விடுப்பிலும், அனுமதியின் பெயரிலும் வந்து சென்றுள்ளேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் தான் என் அம்மாவை மருத்துவமனையில் சேர்த்து அவர்களுக்கு சிகிச்சை யாவும் செய்தார் என்றும், அதற்கான செலவையும் என் அண்ணன் தான் ஏற்றுக் கொண்டார் என்றும் வழக்கு தோதிற்காக வா.சா.ஆ.27 ஆவணத்தை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் என் பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ நான் என் தாயாரை மருத்துவமனையில் சேர்த்து செலவு செய்த விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சிங்காரம், சுப்ரமணியன் ஆகியோர் பெயருக்கு பட்டா மாற்றம் ஆவதற்கு முன்பு அவர்களது தாயார் வள்ளியம்மை ஆச்சி பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். அந்த பட்டாவின் எண்:472. சிங்காரம் மற்றும் சுப்ரமணியன் பெயரில் உள்ள கூட்டுப்பட்ட எண் என்ன என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் என் நிரூபண வாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ சொல்லியுள்ளேன். அது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.28 என்பது நில வரி கட்டியதா என்று கேட்டால், அது பட்டா மாறுதலுக்காக செலுத்தப்பட்ட தொகையாகும். வள்ளியம்மை ஆச்சி பெயரில் இருந்த பட்டாவிற்குத்தான் அவரது மகன்கள் வா.சா.ஆ.28 மூலம் நில வரி செலுத்தியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வள்ளியம்மை ஆச்சிக்கு சிங்காரம், சுப்ரமணியன் மற்றும் அன்னபூரணி என்று 3 வாரிசுகள். பட்டா மாறுதல் ஆன தேதி எனக்கு ஞாபகமில்லை. அந்த தேதியில் அன்னபூரணி இருந்தார். வள்ளியம்மை ஆச்சி இறந்த தேதி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா மாறுதல் உத்திரவை யார் போட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வள்ளியம்மை ஆச்சியின் இறப்புச் சான்றிதழும், வாரிசு உரிமைச் சான்றிதழும் கொடுத்து பட்டா மாற்றப்பட்டதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அன்னபூரணிக்கு பட்டா மாறுதல் சம்மந்தமாக அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.28 ஆவணம் வள்ளியம்மை ஆச்சிக்காக அவரது மகன்கள் கட்டியது தான் என்றும், அதன் பெயரில் அவருடைய மகன்களுக்கு மட்டும் பாத்தியம் வராது என்றாலும் சரியல்ல. என் பெயரில்

26.11.2014, 14.11.2015-ஆகிய தேதிகளில் மதுரை திடீர் நகர் காவல்நிலையத்தில் என் சகோதரர் ஏகப்பன் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த புகார்களில் அவர் தாயார் எழுதி வைத்த உயிலைப் பற்றி விவரம் கொடுத்துள்ளார் என்றாலும், அந்த உயில் பற்றிய புகார்களின் விவரங்களை மறைத்து விட்டு, உயில் பற்றிய விவரங்கள் இல்லாத புகார்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.29-தேதியில் தாயார் எழுதி வைத்தி உயில் பற்றி அவருக்கு தெரிந்திருக்கவில்லை என்றாலும், அதனால் தான் உயிலைப் பற்றி அவர் புகாரில் குறிப்பிடவில்லை என்றாலும், நான் சொல்வது போல், புகார் கொடுத்ததிற்குப் பிறகு உயில் அவரால் தயாரிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. அந்த புகார் தேதிக்கு பிறகு உயில் தயார் செய்யப்பட்டதால் தான் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.29-தேதியில் தான் தகப்பனார் என் அண்ணனுடன் நேசமாக இருந்ததால், அவர் அறிவுறுத்தலின்பேரில் மேற்படி புகார் கொடுக்கப்பட்டது என்றும், அந்த விவரத்தை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.29 நான் சொன்ன காரணத்திற்காக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.